# முஸ்லிம்களின் வாரிசுச் சொத்துப்பங்கீடு: கல்முனைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

MI. Rinosa

amjahan85@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாம் செல்வ சுழற்சியின் ஓர் அங்கமாக நிர்ணயித்திருக்கும் மகத்தானதொரு பொருளாதாரத்திட்டமே வாரிசுச் சொத்துப்பங்கீடு ஆகும். இலங்கை முஸ்லிம்களிடையே வாரிசுச்சொத்து காலம் தொட்டு பகிர்ந்தளிக்கப்பட்டு வரும் விதத்தினை அறிதலும் அவை அனைத்துமே இஸ்லாமிய வரையறைகளுக்குட்பட்டு இடம்பெறுகிறதா என கண்டறிதலும் வாரிசுச் சொத்தை இஸ்லாமிய நியமங்களின் பிரகாரம் பகிர்ந்தளிப்பதன் அவசியத்தை வலிறுயுறுத்துதலும் அதற்காக சில ஆலோசனைகளை முன்வைத்தலும் இவ்வாய்வின நோக்கங்களாகும். இலங்கை முஸ்லிம்களைப் பொருத்தவரையில் ஆய்வுப்பிரதேச முஸ்லிம்களிடையே சொத்துப்பகிர்வின்போது பெண்கள் முன்னிலைப்படுத்தப்படுவதுடன் ஆண்கள் சொத்து பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். இப்பிரச்சனையானது கல்முனைப்பிரதேசத்தில் மட்டுமன்றி இன்னும் பல பகுதிகளிலும் இடம் பெறுகின்றது. இந்நடைமுறையானது பல்வேறு விளைவுகளுக்கு இட்டுச் செல்கின்றது. எனவே ஆய்வுப்பிரதேச சொத்துப்பங்கீட்டு முறை விபரிக்கப்பட்டு அவற்றை இஸ்லாத்துடன் ஒப்பீடு செய்து இஸ்லாமிய வழிமுறையில் சொத்துப்பங்கீட்டை அமைத்துக்கொள்வதற்கான சில முன் மொழிவுகளும் ஆய்வில் இடம் பெறுகின்றது. இதற்காக முதல் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து, நேர்காணல், விடய ஆய்வு என்பனவும் இரண்டாம் நிலை தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கலைச் சொற்கள்** : முஸ்லிம்கள், வாரிசுச் சொத்து, இஸ்லாம்

## ஆய்வின் பின்னணி :

அரபு மொழி வழக்கில் **பராயிழ்** என்ற பதத்தால் இவ் வாரிசுரிமை அழைக்கப்படுகிறது. பர்ழ் என்பதற்கு கடமையாக்கப்பட்டது, பங்கு பிரிக்கப்பட்டது, தெளிவாக்கப்பட்டது என்று பொருள்படுகின்றது. இஸ்லாமிய வழக்கில் ஒரு முஸ்லிம் இறந்த பின்னர் விட்டுச் செல்கின்ற சொத்துக்கள் (அவரின் பின்னர்) யார் யாரைச் சென்றடைய வேண்டும் என்பதை பங்குபிரித்துக் காட்டும் சட்ட அமைப்பு முறையாகும். பராயிழ் அல் மீராஸ் அல் வராஸத் அத்தரிகா எனும் பதங்களாலும் இஸ்லாமிய சட்டத்துறையில் அழைக்கப்படுவதுண்டு.

முழுவாழ்வையூமே இபாதாவாக்கி நோக்கும் இஸ்லாத்தின் பார்வையில் வாரிசுரிமையூம் ஒரு இபாதாவாகும். அது தொடர்பிலான அறிவை வளர்த்துக் கொள்வது பர்ளுகிபாயா எனக் கூறுகிறது. அல்குர்ஆன் வாரிசுச் சொத்துத் தொடர்பில் ஆணும் பெண்ணும் பங்கு பெறக்கூடியவர்கள் என தெளிவூபடுத்துகின்றது.

***“உங்கள் குழந்தைகள் விடயத்தில் உங்களுக்குக் கட்டளை பிறப்பிக்கின்றான். இரு பெண்களின் பங்கைப் போன்று ஓர் ஆணுக்கும் இருக்கின்றது.”(4:11)***

ஒரு இறை நம்பிக்கையாளனைப் பொருத்தவரை நிலம் என்பது வெறும் மண் மட்டுமல்ல. படைத்த இறைவன் புறத்திலிருந்து மனித சமூகத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்ற மாபெரும் அருட்கொடையாகும். மேலும் அவனுக்கு நிலத்துக்கானத் தேவை மறுமை வரை தொடர்கிறது.

***பெண்கள், ஆண் மக்கள், பொன், வெள்ளிகளினால் சேர்த்து வைக்கப்பட்ட பெருங்குவியல்கள், அடையாளமிடப்பட்ட குதிரைகள், ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய கால்நடைகள், வேளாண்மை ஆகிய மனதுக்கு ஆசையூட்டப்பட்டவற்றை நேசிப்பது மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளது. இவை யாவும் நிலையற்ற இவ்வுலக வாழ்வின் அற்ப இன்பங்களே (ஆல இம்ரான் : 14)***

மேலும், “நீங்கள் வாரிசுரிமைச் சட்டங்களை கற்று அவற்றைப் பிறருக்குக் கற்பிப்பீர்களாக. ஏனெனில் அவை கல்வியின் அரைவாசிப் பகுதிக்குச் சமனாகும். இக்கலை மறக்கக் கூடியதும் ஆகும். இதுவே எனது சமூகத்திலிருந்து அகற்றப்படும் முதல் அம்சமுமாகும்.”

எனும் ஹதீஸ் பராயிழ் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையே வலியுறுத்துகிறது.

“எவர் பிறரது நிலத்தில் ஒரு பகுதியை அபகரித்துக் கொண்டாரோ அவர் ஏழு நிலங்களை கழுத்தில் மாலையாகக் கட்டித்தொங்கவிடப்படுவார்” என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஸஈத் இப்னு ஜபல் ரலி அவர்கள் கூறினார்கள்.

இஸ்லாமிய வாரிசுரிமை சட்டமானது மக்கள் மத்தியில் சீரான உறவுகளை நெறிப்படுத்தல், நெருங்கிய இணைப்பை ஏற்படுத்தல், மோதல்களைத் தவிர்த்தல், பண்பட்ட மனசாட்சியை ஏற்படுத்தல், போட்டி மன்னப்பான்மை, குரோதம், வஞ்சகம், பேராசை போன்றவற்றைத் தவிர்த்தல், குடும்ப அமைப்பைப் பேணல், செல்வம் ஒரு கூட்டத்தாரிடம் மாத்திரம் சுழல்வதைத் தவிர்த்தல் பேன்ற நோக்கங்களை கொண்டதாகும்.

வாரிசுரிமை முறையில் கல்வி வளர்ச்சி, இயக்கங்கள் சிந்தனைகளின் வளர்ச்சியாலும் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் ஆய்வுப்பிரதேசத்தில் சொத்துப்பிரிப்பின்போது அந்நிய கலாசார தாக்கங்கள், பழமை போற்றும் மரபு, இஸ்லாம் பற்றிய தெளிவின்மை, குடும்ப சச்சரவுகள், உறவுமுறைகளுக்கிடையேயான விருப்பு வெறுப்புக்கள் என்பன இவற்றுள் செல்வாக்கு செலுத்துகின்றதனையும் காணலாம். இந்த வகையில் ஆய்வுப்பிரதேச சொத்து நடைமுறைகளை இஸ்லாமிய கண்ணோட்டத்தில் அணுகி இஸ்லாமிய முறைப்படி சொத்துப்பகிர்வை வலியுறுத்துதலும் ஆய்வின் பின்னணி ஆகும்.

## ஆய்வின் நோக்கம்

கல்முனை பிரதேச முஸ்லிம்களது சொத்துப்பகிர்வு முறையை விபரித்தல்

அவற்றை இஸ்லாத்துடன் ஒப்பிடல்

ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பும்

கல்முனை பிரதேச வாரிசுப்பிரிப்பு முறையை அறிய முதல் நிலை தரவுகளும் இஸ்லாத்துடன் அதனை ஒப்பிட இரண்டாம் நிலை தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து, நேர்காணல், விடய ஆய்வு என்பனவும் இரண்டாம் நிலை தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடலும் பெறுபேறுகளும்**

கல்முனை முஸ்லிம்களது சொத்துப்பகிர்வில் பொதுவாக மரணத்துக்கு முன்னரே பிரிக்கப்படுவதுடன் சொத்துக்குரியவரது விருப்பத்துக்கேற்ப பகிரப்பட்டு ஆண்களுக்கு அரிதாக வழங்கப்படுகின்றதனை காணலாம்.

**ஆண்களுக்கு சொத்து வழங்கப்படாமைக்கான காரணங்கள்**


**சீதனம்**: பெண் பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் இருக்கும் சந்தர்ப்பத்தில் பெண் பிள்ளைகளுக்கு திருமணம் முடிக்கும்போது இன்ன வீடு அல்லது இன்ன பங்கு தருவதாகக் கூறியே பேச்சுவார்த்தை இடம்பெறுகிறது.

**இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் பற்றிய அறிவின்மை :**

இஸ்லாமிய வாரிசுரிமை சட்டமானது கஷ்டமானது என்ற நிலை காணப்படல். மார்க்கத் தலைவர்களுக்கு கூட இது தொடர்பான அறிவின்மை காணப்படுகிறது.

| | நன்று | ஓரளவு | **மிகக் குறைவு** |
|---|---|---|---|
| **பல்கலை மாணவர்கள்** | 03 | 07 | 00 |
| **ஆசிரியர்கள்** | 04 | 04 | 02 |

| | | | |
|---|---|---|---|
| **மௌலவிகள்** | 10 | 00 | 00 |
| **பொது மக்கள்** | 00 | 03 | 07 |




**வாரிசுச் சொத்தை இஸ்லாத்தின் அடிப்படையில் பிரிப்பதில் விருப்பமின்மை :**

சொத்துப்பிரிப்பின் போது இறந்தவரின் பிள்ளைகள் மட்டுமன்றி ஏனையோரும் பங்கு பெறுவர். இதனால் அவர்களது பங்கு குறைந்துவிடும் என்ற எண்ணம்.

**மரபு வழிப் பழக்கமும் பிரதேச வழமையும்**

பரம்பரை வழியாக எவ்வாறு சொத்து பிரிக்கப்படுகிறதோ அவ்வாறே பிரித்துவிட முனைகின்றனர். மேலும் தமிழர்களுடன் சேர்ந்து வாழ்வதால் அவர்களது வழக்கத்தின் படியும் பிரிக்கப்படுகிறது.

**சகோதரர்கள் சகோதரிகளை பொறுப்பேற்க வேண்டியமை:**

சகோதரிகளுக்கு வீடு கட்டுவதற்காகவே சகோதரன் சொத்து சேர்க்க வேண்டியுள்ளான். ஆத்துடன் அவனுக்கு அவன் திருமணம் செய்யப்போகும் பெண் வழியாக சொத்து கிடைக்கிறது. ஆண்களால் சம்பாதித்துக் கொள்ள முடியும் என்ற எண்ணம் நிலவுகின்றது. மேலும் சகோதரிகள் இருக்கும் போது ஆண் சொத்துப் பெறுவதை அநாகரீகமாகக் கொள்ளப்படுகின்றது.

**வாரிசுகள் பற்றிய விபரம் -**

**ஒப்பீடு**

1. **இஸ்லாமிய பார்வையில் கணவனின் பங்கு**

- ➢ மனைவி இறந்துவிட்டால் இறந்த மனைவிக்கு கணவன் மூலமோ வேறு கணவன் மூலமோ பிள்ளைகள் இல்லாதுவிடின் அவள் விட்டுச் செல்லும் சொத்தில் ½ பாகம் கணவனுக்கு கிடைக்கும்.
- ➢ மனைவிக்கு பிள்ளைகள் இருந்தால் கணவனுக்கு ¼ பங்கு கிடைக்கும்.

**பிரதேச வழக்கில்……**

- மனைவி மரணித்து கணவன் இருந்தால் சொத்தில் அவருக்கு பங்கு இல்லை. அவர் மகளுடன் வாழ்ந்து மருமகனுடைய உழைப்பில் உண்ண வேண்டும். அல்லது வேறு திருமணம் செய்து கொள்ள வேண்டும்.
- மகன் மட்டும் இருந்தால் மகனுக்கே முழுச் சொத்தும் கொடுக்கப்படுகிறது.
- பிள்ளைகள் இல்லாவிடின் கணவனுக்கு சொத்து கிடைக்காது மனைவியின் சகோதரிகளுக்கு செல்லும்.
- கணவனும் அவளது தந்தைக்கு பிறந்த சகோதரனும் இருக்க மனைவி இறந்துவிட்டால் எனின் கணவனுக்கு ½ பாகமும் மீதி பாகம் அவனது தந்தையுடன் பிறந்த சகோதரனுக்கு சென்றடைய வேண்டும். இங்கு சகோதரன் கருத்தில் எடுக்கப்படுவதில்லை.

**மனைவிக்கு இஸ்லாமிய பார்வையில்**

- இறந்துபோன கணவனுக்கு இந்த மனைவியின் மூலமாகவோ வேறு மனைவியின் மூலமாகவோ பிள்ளைகள் இல்லாத பட்சத்தில் விட்டுச் சென்ற சொத்தில் ¼ கிடைக்கும். மேற்கூறியோரில் யாரும் இருந்தால் 1.∴8

**பிரதேச வழக்கில்…..**

- மனைவிக்கு கணவனின் சொத்து கிடைக்காது பிள்ளைகளுக்கே சேரும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிமார் இருந்தால் பணபலம், செல்வாக்கு பெற்ற மனைவிக்கு சொத்து சேரும்.
- ஒருவருக்கு ஒரு மனைவி, தாய், தந்தை, மகன் இருக்கும் சமயம் அச்சொத்தில் 3 பங்கு இறந்து போனவரது மனைவிக்கும் 4 பங்கு தாய்க்கும் 4 பங்கு தங்கைக்கும் வழங்கப்பட்ட பின்னே மீதமுள்ளது அனைத்தும் மகனுக்கு வழங்கப்படவேண்டும்.
- தாய் தந்தை இங்கு கருத்தில் எடுக்கப்படுவதில்லை மகனுடன் அல்லது மகளுடன் வாழ வேண்டியிருத்தல்

**இஸ்லாத்தில் தாயின் பாகம்**

- இறந்தவருக்கு குழந்தைகளோ மகனின் குழந்தைகளோ மகன் வழிச் சந்ததியில் இருந்தால் அல்லது சகோதர சகோதரிகள் இருந்தால் தாய்க்கு 1.∴6 பாகம் கிடைக்கும்.
- இவர்கள் எவரும் இல்லாத பட்சத்தில் தாய்க்கு 1.∴3 பாகம் கிடைக்கும்.
- இறந்த மகனுக்கு மனைவி இருந்து அல்லது மகளுக்கு கணவன் இருந்து தந்தையும் பாகம் பெறும் நிலையில் கணவன் அல்லது மனைவிக்கு கொடுத்தது போக மீதி உள்ளதில் 1.∴3 பாகம் தாய்க்கு கிடைக்கும். மீதி உள்ளது தந்தைக்கு கிடைக்கும்
- அவ்விடத்தில் தந்தை இல்லாமல் தந்தையின் தந்தை இருந்தால் தாய்க்கு மொத்த சொத்தில் 1.∴3 கிடைக்கும்

**பிரதேச வழக்கில்……**

- இறந்தவருக்கு தாய், தந்தை, வேறு உறவுகள் இல்லாத சந்தர்ப்பத்தில் இறந்தவரது சொத்தை தாய் தந்தை அனுபவிப்பதனையும் இறந்தவருக்கு கணவன், மனைவி,

பிள்ளைகள் இருக்கும் பட்சத்தில் தாய்க்கு எப்பாகமும் இல்லாத நிலையும் காணப்படுகிறது

**இஸ்லாத்தின் பார்வையில் தந்தையின் பாகம்**

- இறந்தவருக்கு மகன் அல்லது மகனின் மகன் ஆண்வழி சந்ததியில் ஆண்கள் இருந்தால் தந்தைக்கு 1∴6 பாகம் இருக்கும்
- இறந்தவருக்கு மகள், மகனின் மகள் இறந்தவரின் ஆண்வழிச்சந்ததியில் ஆண் யாரும் இன்றி பெண் மட்டும் இருந்தால் தந்தைக்கு 1∴6 பாகம் பெருவர்.
- இவ்வுறவினர்கள் இல்லாத பட்சத்தில் வாரிசு பெறும் நபர்களுக்கு கொடுத்தது போக எஞ்சிய சொத்து முழுவதையும் தந்தை அஸபா எனும் வகையில் பெறுவார்.

**பிரதேச வழக்கில்…..**

- முஸ்லிம் சமூகத்தில் இறந்தவருக்கு கணவன் அல்லது மனைவி பிள்ளைகள் இருக்கும் நிலையில் எப்பங்கும் கிடையாது. இறந்தவருக்கு எந்த வாரிசும் இல்லாவிடின் தந்தைக்கு சேரும்.

**இஸ்லாத்தின் பார்வையில் மகனின் பாகம்**

- இறந்தவர்க்கு மகனுடன் மகள் இருக்கும் நிலையில் ஏனைய பங்குதாரர்களும் இருந்தால் அவர்களுக்கு மகனுக்கு 2 பங்குகள் மகளுக்கு 1 பங்கு என்ற விகிதம்
- மகள் இல்லாது தாய், தந்தை, கணவன் மனைவி போன்றோர் இருப்பின் அவர்களது பங்கு போக எஞ்சியது மகனுக்கு கிடைக்கும்
- மகன் இல்லாது தாய், தந்தை, கணவன் மனைவி போன்றோர் இருப்பின் அவர்களது பங்கு போக எஞ்சியது மகளுக்கு கிடைக்கும்
- மேற்குறிப்பிட்ட யாருமே இல்லாது இருந்து இறந்தவரின் சகோதர சகோதரிகள் இருந்தாலும் இல்லாவிடினும் மகன் அல்லது மகளுக்கு சேரும்.

**இஸ்லாத்தின் பார்வையில் மகளின் பாகம்**


- ஒரே மகளாயின் ஏனையோருக்கும் அவளுக்கு பாதியும் கிடைக்கும்.
- ஒன்றுக்கு மேலான பெண்மக்கள் இருந்தால் 2∴3 பாகம்
- மகன் அல்லது மகன்களுடன் இருந்தால் பெண்மக்கள் குறிப்பிட்ட பாகம் இன்றி தன் சகோதரனுடன் சேர்ந்து அஸபா ஆகிறார். அப்போது 2 : 1 என பகிரப்படும்.

**பிரதேச வழக்கில்……**

- மகன் மட்டும் இருந்தால் மகனுக்கு சொத்து வழங்கப்படும்
- மகனும் மகள்களும் இருந்தால் மகளுக்கே வழங்கப்படும்.
- பெரும்பாலும் வீடு காணி மகளுக்கு வழங்கப்படும்
- வாகனம், கடை போன்றன மகனுக்கு வழங்கப்படும்
- மகளுக்கே கூடுதலாக வழங்கப்படுகிறது

**வஸிய்யத் பற்றிய நிலைப்பாடு**

- வஸிய்யத் மரணத்தருவாயில் ஒருவர் கூறும் விடயம் என்ற மனப்பதிவு கொண்டிருத்தல்.
- வஸிய்யத் எவ்வளவு செய்ய வேண்டும் என்பது பற்றிய அறிவின்மை
- வஸிய்யத், ஹிபத், வாரிசுரிமை தொடர்பான தெளிவின்மை
- ஹிபத்தை பொருத்தவரை இன்ன ஆளுக்கு இன்ன பொருளை அன்பளிப்பாக வழங்குகிறேன். என எழுதிய உடனே அது உரிமை பெற்றுவிடும்




மேற்படி இஸ்லாம் வாரிசுச் சொத்துப் பகிர்வுக்கான சரியான வழிகாட்டல்களை தந்துள்ள போதும் முஸ்லிம்கள் எல்லோரும் சொத்துப் பகிர்வில் சரியான வழிமுறைகளைப் பின்னபற்றுவதில்லை எனலாம்.

**வாரிசுச் சொத்துப் பகிர்வின் சரியான முறை பின்பற்றப்படாமையினால் ஏற்படும் விளைவுகள்**

- **Case Study 1**

தந்தையின் மூத்த சகோதரி மரணமும் (மாமி) சொத்தை தந்தையின் இளைய சகோதரி அனுபவித்தலும் - இன்றும் குடும்பத்தில் வெறுப்புணர்வு காணப்படுகின்றது.

- **Case study 2**

பிள்ளைகளற்ற கணவனதும், மனைவியினதும் சொத்துப் பகிர்வின் போது கணவன் ஒரு சாராருக்கும் மனைவி ஒரு சாராருக்கும் பகிர்ந்தளிக்க முனைந்ததால் விவாகரத்து.

**ஆலோசனைகள் :**

- ✓ இஸ்லாம் வாரிசுரிமை தொடர்பில் செலுத்தியுள்ள முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படல்
- ✓ சிறப்புத்துறை சார் கற்கைகளை ஏற்படுத்தல்
- ✓ நிபுணத்துவம் பெற்ற அறிஞர்களை உருவாக்கல்
- ✓ மக்களுக்கு இது தொடர்பாக அறிவுரைகளை வழங்கல்
- ✓ சிறுபான்மையின மக்கள் வாழும் நாட்டில் இஸ்லாமிய சட்டங்களை பின்பற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தும் அதனை கவனத்திற் கொள்ளாமை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல்
- ✓ வுக்ப் சபை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுவது போல அரச அங்கிகாரம் பெற்ற வாரிசு சபைகளை அமைத்தல்.
- ✓ வாரிசுரிமை பற்றி பாட நெறிகளை முஸ்லிம்களுக்கு வழங்குதல்.

- ✓ வாரிசுரிமை சம்பந்தமான விசேட கற்கைகள் ,தெளிவுகள் உள்ள இலங்கை வாழ் அறிஞர்களை மக்களுக்கு அறிமுகம் செய்துஅவர்களை வாரிசுரிமை பற்றிய ஐயங்களுக்கு தெளிவு பெற அவர்களை தொடர்பு கொள்ள வழிவகைகளை உருவாக்குதல்.

- ✓ வாரிசரிமை பற்றி தெளிவாக,பிழையின்றி எழுதப்பட்ட நூல்கள் மக்களுக்கு இலகுவாக கிடைக்கவும்,அதன் மூலம் அவர்கள் இது பற்றி தெளிவு பெற வசதிகள் செய்தல்.

- ✓ இஸ்லாமிய அரபு மத்ரஸாக்கள் மாணவர்களுயுக்கு இத் துறையை கற்பதற்கு விசேட விழிப்புணர்வுகளை செய்து அதன் மூலம் ஆர்வம் ஊட்டல்.

- ✓ இலங்கையில் உள்ள இஸ்லாமிய இயக்க உறுப்பினர்களுக்கும்,ஏனைய முஸ்லிம் மத அறிஞர்களுக்கும் இது பற்றிய கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து தெளிவு பெற்றுக் கொள்வதோடு அதன் மூலம் முஸ்லிம் மக்களுக்கு சிறந்த தீர்ப்புக்கள் வழங்க வழி செய்தல்.

- ✓ வாரிசுரிமை பங்கீடுகளின் போது நில அளவையாளர்களைின் உதவியுடன் பிரித்தல்,இதன் மூலம் பிரச்சினைளகளை சிறிதளவு குறைக்கலாம்.

- ✓ வாரிசுரிமை பற்றி ஆய்வுகள்,கட்டுரைகளுக்கான போட்டிகள், பாராட்டுக்கள் வழங்க ஏற்பாடுகள் செய்தல்.

- ✓ வாரிசுரிமை பற்றிய நவீன திட்டங்கள்,அமைப்புகள் பற்றிய விழிப்புணர்வுகளை இலங்கை மக்களுக்கு அறிமுகம் செய்தல்.

- ✓ வாரிசுரிமை பற்றி சமூக பிரச்சினைகளை முடிந்த அளவு பள்ளிவாயல்களுடன் தொடர்பு கொண்டு தீர்பளிக்க மக்களுக்கு அறிவுரைகளை வழங்குவதுடன், வாரிசுரிமை பற்றிய தெளிவுகள், பிரச்சினைகளை சமயோசிதமாக கையாளுவதற்கான ஆற்றல்,அறிவு கொண்ட பள்ளிவாயல் தலைவர்கள், மசூரா உறுப்பினர்கள்,மத அறிஞர்களை உருவாக்குதல்.

**முடிவுரை**

இஸ்லாமிய வாரிசுரிமையை மேலோட்டமாக பார்க்கும் ஒருவருக்கு அதன் பயன்பாடுகளையும், மறைமுகமான நன்மைகளையும் கண்டு கொள்ள முடியாது. வாரிசுரிமையை இஸ்லாம் கூறும் முறையில் நடைமுறைப்படுததினால், வாரிசுரிமை மனித இனத்திற்கு அவசியமான சட்டம் என்பதை புரிந்து கொள்ளலாம். நிச்சயமாக அல்லாஹ்வின் சட்டம் மனித இனத்தை பாதுகாக்கும் ,மேலும் அதனை வளப்படுத்தும்.

## References


1. Ameer Ali, 1986, Muhammaden Law Vol 2, New Dellhi, kithabavan.

2. Jaldeen MS. 1993 " The Muslim Law of Succession inheritance and waqf, colombu the feteration of Associations of muslim youth in Sri Lanka (FAMYS)

3. Muhammed Mustafa khan, 2000, "Islamic Law of Inheritance – A  new approach"

4. முஹம்மத் யூசுப் மிஸ்பாஹி. எம். 2013. "இஸ்லாமிய வாரிசுரிமை சட்டங்கள்", சென்னை சாஜிதா புக் சென்றர்.

5. உமர் பாறூக் தாவூதி, எம். எஸ்., 1994. "இஸ்லாமிய ஷரிஅத் நீதி மன்றம்", சென்னை அனஸ் புக் சென்றர்.

6. அனஸ் முஹைதீன், 2002. "ஷாபிஈ பிக்ஹின் சட்டக் களஞ்சியம்" நல்லூர் தாருல் ஹுஸ்ரா,

7. அன்வருதீன், ஏ. 1992. "இஸ்லாம் இயம்பும் பாகப் பிரிவினை", காஜியார் புக் டிபோ

8. அபுல் கலாம். ஏச். ஏம். 1996. "முஸ்லிம் சட்டம்" , சென்னை காசிம் மரைக்கார், அஸ்மா பீவி அறக்கட்டளை.

9. முஹம்மது இஸ்மாயில், எஸ். ஏம். ஏச். 1993. "முஸ்லிம் வாரிசுரிமை சட்டம்", சென்னை, அனஸ் புக் சென்றர்.

10. முஹம்மத் அக்ரம் 2001 "நடைமுறைக் கேற்ற இஸ்லாம்" முஸல்மான் பப்ளிகேஸன்"

11. அமீன் ஏ.எச்.ஜீ 2007,முஸ்லிம் மரபு வழியுரிமைச் சட்டம்-ஒரு வழிகாட்டி,அல்-அமீன் சட்ட மத்திய நிலையம்,கொழும்பு.

12. அரபாத் கரீம் எம்,ஜே.எம் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் பொருளாதார சிறப்பம்சம்-நீதி (2011) ஜனவரி-மார்ச்,இஸ்லாமியச் சிந்தனை ,நளீமிய்யா இஸ்லாமியா பதிப்பகம் பேருவளை.

13. அரபாத் கரீம் எம்,ஜே.எம் செல்வப் பங்கீட்டின் நியாயங்களும் பெண்ணின் வாரிசுரிமை நீதியும் (2011) ஏப்ரல்-ஜீன்,இஸ்லாமியச் சிந்தனை ,நளீமிய்யா இஸ்லாமியா பதிப்பகம் பேருவளை.

14. அபுல் கலாம், எம்.எம், (1996) முஸ்லிம் சட்டம், காசம் மரைகக்காயர்- அஸ்மா பீவீ அறக்கட்டளை, சென்னை.

15. அஹ்மதைன், (1998) முஸ்லிம் தனியார் சட்டம், இஸ்லாம் நிறுவனம் ட்ரஸ்ட், சென்னை.

16. முஹம்மத் அமீனுத்தீன், டி.எல். (2003) இலங்கை முஸ்லிம் தனியார் சட்டம், மொபா பிரின்ட் இமேஜ், மருதமுனை.

17. இம்தியாஸ்.எம்.எஸ்.எம் இ (2012.03.08)இ சொத்துப் பங்கீட்டில் பெண்களுக்கு குறைவாக கொடுக்கப்படுவது ஏன்?. Retrieved From http://www.islamkalvi.com/?p=6463

18. (2013.09.25) இ உலகப் பொருளாதார நெருக்கடிக்கு இஸ்லாம் மட்டுமே விமோசனம். Retrieved From http://www.darulaman.net/culture/economics/.25-economics-crisis-and-Islamic solution.html